பிஞ்சு வயதிலே எங்கள் உள்ளம் அழுதது
வஞ்சமில்லா எங்களுக்கு வாழ்வு கசந்தது
துள்ளி ஓடும் பருவத்திலே துவண்டுகின்றோம் நாம்
பள்ளி செல்ல வசதியின்றி நொந்துகின்றோம் 2

பிஞ்சு வயதிலே எங்கள் உள்ளம் அழுதது
வஞ்சமில்லா எங்களுக்கு வாழ்வு கசந்தது

இன்னல்கள் பட்டு பட்டு எம் இதயம் வலித்தது
இரக்கமற்ற வதைகளால் எம் உடலும் களைத்தது 2
துடித்தோம் துவண்டோம் துணையின்றி தவித்தோம் 2
மீட்க வருவர் யார் என்று விழி பூக்க காத்திருந்தோம்

பிஞ்சு வயதிலே எங்கள் உள்ளம் அழுதது
வஞ்சமில்லா எங்களுக்கு வாழ்வு கசந்தது

வாழ்வின் ஒளி கூட்டையின்றி மலர்ந்தது ஒரு சோலை 2
செஞ்சோலை வந்து சேர்ந்தோமே நாமெலாம் பூமாலை
தளரோம் தயங்கோம் தலை நிமிர்ந்தெழுவோம் 2
தாயகத்தை காத்திட வீரராய் எழுந்திடுவோம் 2

பிஞ்சு வயதிலே எங்கள் உள்ளம் அழுதது
வஞ்சமில்லா எங்களுக்கு வாழ்வு கசந்தது

செஞ்சோலைக் குயில்களாகி சிறகடித்தோம் சிறை உடைத்தோம்
செம்மையான நோக்கறித்தோம் நல்ல வழி நாம் தெரிந்தோம் 2
துணிந்தேசம் துயர் மறந்தோம் துடிப்புடன் எழுந்தோம் 2
தூய பாதைதனில் நாம் இங்கு தெளிவுடனே நடந்திடுவோம்

பிஞ்சு வயதிலே எங்கள் உள்ளம் அழுதது
வஞ்சமில்லா எங்களுக்கு வாழ்வு கசந்தது
துள்ளி ஓடும் பருவத்திலே துவண்டுகின்றோம் நாம்
பள்ளி செல்ல வசதியின்றி நொந்துகின்றோம் 2

பிஞ்சு வயதிலே எங்கள் உள்ளம் அழுதது
வஞ்சமில்லா எங்களுக்கு வாழ்வு கசந்தது